★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ . PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 1உ வியாழன் (16—8—56) ★ ★ வெளியூர் : ஆவணி 2உ வெள்ளி (17—8—56) [இதழ் 57

## 'இரண்டாம் திட்டம் ஒரு பேராசை இலட்சியமாகும்'

புதுடில்லி, ஆக. 14—

"கிடைக்கக்கூடிய நிதி வசதிகள், நிர்வாக தொழில் நுணுக்க வசதிகள் இவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் மிகப் பேராசையான இலட்சியமாகும்" என்று உலக பாங்கிக் குழு ஒன்று கூறியிருக்கிறது.

"இரண்டாம் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள பற்றுக் குறைப் பொருளாதாரம், பணப் புழக்கத்தை பொருளாதார அடிப்படைத் தேவைக்கு மிக அதிகமாகவே அதிகரித்துவிடக்கூடிய அபாயத்தை உடையது" என்றும் அந்தக் குழு கூறியிருக்கிறதாம்.

# பண்டித நேருவின் 'ஜனநாயக' விளக்கம்!

## மக்கள் சபையின் முடிவு இறுதியானதாம்!

### முடிவினை மாற்ற கிளர்ச்சி கூடாதாம்

### சர்க்காரை வேண்டுமானால் மக்கள் மாற்றிக்கொள்ளலாமாம்

### இந்தியப் பிரதமர் நேருவின் திமிர்வாதம்

புதுடில்லி, ஆக. 15—

'சுதந்திர தின' விழாவினை ஒட்டி டெல்லி செங்கோட்டை மைதானத்தில் பேசிய பிரதமர் நேரு, காந்திய வழியிலிருந்து மக்கள் விலகிச் சென்றுவிட்டதாகக் குற்றம் சாட்டிக் கடிந்து கொண்டாராம்.

மாநிலப் புது அமைப்பு விவகாரத்தை ஒட்டி எழுந்த தகராறில், மக்கள் வழிவிலகிச் சென்றதற்குக் கண்டனம் தெரிவித்தாராம்;

வெளிநாடுகளில் இந்தியா மதிக்கப்படுவதற்குக் காரணமான 'பஞ்சசீல'க் கோட்பாடுகளை உள்நாட்டிலும் மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்.

"மாநிலப் புது அமைப்பு மசோதா மக்கள் சபையில் நிறைவேறிவிட்டது அதுதான் இறுதியான முடிவு; அதுதான் சட்டம்; அதனை அச்சுறுத்தல்களாலும் பயமுறுத்தல்களாலும் மாற்றிவிட முடியாது," என்றும் அவர் மிரட்டினாராம்.

"முக்கியமான விவகாரங்களுக்கு நடுத் தெருவில் முடிவு காண நினைத்து இளைஞர்கள் போக்கிரித்தனமான முடிவுகளைக் கையாள வேண்டாம்" என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்.

"நமது மக்கள்சபை என்பது என்ன? அது இந்தியாவின் பெருமைக்கு அறிகுறி; அங்குதான், மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி எல்லா விவகாரங்களிலும் முடிவெடுக்கிறார்கள்; அங்கு எடுக்கப்படும் முடிவுகள்தான் நாட்டின் சட்டங்களாகும்; அவற்றைத்தான் உலகமும், இந்திய மக்களும், சட்டமென ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"மக்கள் சபையில் ஏதேனும் ஒரு விவகாரம் முடிவு செய்யப்பட்ட பின் அந்த முடிவுக்கு எதிராகப் பலாத்காரமான கிளர்ச்சியைத் துவக்குவதும், போலீசாரை அறைகூவுவதும், சர்க்கார் கட்டிடங்களை எரிப்பதும் என்ற நிலை ஏற்பட்டால் அது வீரத்தையோ விவேகத்தையோ காட்டுவதாக ஆகாது.

"இன்னும் ஏழெட்டு மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் கருத்து அறிவிக்க உரிமையுண்டு. ஒவ்வொரு கட்சியும் மக்களை தங்கள் தங்கள் வழிக்குத் திருப்ப முனையலாம்.

"இப்போதுள்ள சர்க்கார் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், வேறு சர்க்கார் அமைத்துக் கொள்ளுங்கள்; நான் சந்தோஷப்படுவேன். நான், என் நாட்டிற்கும் மக்களுக்கும் என்ன செய்ய முடியுமோ அந்த சேவையைத் தொடர்ந்து செய்வேன்,"

என்றும் பண்டித நேரு வியாக்கியானம் பண்ணினாராம்.

## கிளர்ச்சிக்கு மக்களைத் திரட்டுவது தேசத் துரோகமாம்!

கோளத்தூர் ஊராட்சி மன்றத்தில்

### அண்ணு

20—8—56 மாலை 3 மணியளவில், கோளத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், அண்ணு அவர்கள் காந்தியார் உருவப் படத்தைத் திறந்து வைப்பார்கள்.

### அமைதி நிலைநாட்ட பெண்கள் அணிவகுப்பு

அகமதாபாத் நகரத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக பெண்கள் அணிவகுப்பு ஒன்று திரட்டப்படுவதாகத் தெரியவருகிறது.

மகாகுசராத் வித்யார்த்தி சமிதியைச் சேர்ந்த ஹரிபிரசாத் வியாஸ் என்பார், சுமார் 50 பெண்கள் அடங்கிய அணிவகுப்பு ஒன்று நகரில் சம்பவங்களுக்கு இலக்காகியுள்ள பகுதிகளுக்குச் சென்று பலாத்காரத்தில் ஈடுபடாமலிருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்ளும் என்றும், தாக்குதலுக்கு ஆளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோருக்கு உதவ பெண் தொண்டர்கள் அனுப்பிவைக்கப்படுவர் என்றும் அறிவித்திருக்கிறார்.

### கருத்து வேறுபாடு இருக்கலாமாம்; அதற்காகக் கிளர்ச்சிகள் எதுவும் கூடாதாம்

புதுடில்லி, ஆக. 15—

"இந்தியாவில், பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன; நல்லதுதான். இந்தக் கருத்துக்கள் குறித்து விவாதம் கூட இருக்கவேண்டும்; ஆனால் விவாதம் என்பது வேறு; வேறுபட்ட கருத்துக்காகத் 'தெருக்களில் சண்டையிடு'வதென்பது முற்றிலும் வேறு.

"ஏதேனும் ஒரு அரசியல் கட்சி மக்களைக் கிளர்ச்சிக்காகத் திரட்டுமானால், அந்தக்கட்சி இந்தியாவிற்கு விசுவாசமுடையதல்ல; அப்படிச் செய்வது நமது நாட்டின் சுதந்திரத்தின் அடிப்படையைத் தகர்ப்பதாகும்,"

—என்று, 'சுதந்திர தின' விழாவினை ஒட்டி செங்கோட்டையில் பிரதமர் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

### பம்பாயில் எதிரொலி!

அகமதாபாத் நகரில் போலீஸ் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டிக்கும் வகையில், பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் மற்றும் பெரும் வர்த்தக நிறுவனங்கள் மட்டும் கடந்த திங்களன்று மூடப்பட்டன என்று தெரியவருகிறது.

### பஞ்சசீலக் கொள்கை பாதிக்கப்படுகிறது?

பர்மா கவலையுறுகிறதாம்

புதுடில்லி, ஆக. 15—

ஏறக்குறைய சுமார் 8,000 சீனப்படையினர் பர்மாவின் எல்லைக்குள் 100 மைல் தூரத்திற்கு வந்து பத்து கிராமங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக இங்கு பர்மிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளாராம்: ஆனால், தங்களுடைய படைகள் பர்மிய எல்லையைத் தாண்டவில்லை என்று சீன சர்க்கார் மறுத்துள்ளார்களாம்.

'பஞ்சசீலக்' கொள்கைகளில் கையெழுத்திட்ட பின்னருங்கூட, தன்னுடைய படைகளை சீனா திரும்பப் பெறவில்லையே என்று பர்மா கவலையுறுகிறதாம்!

## மாநிலப் புது அமைப்பு அரசியல் பொருளாதாரப் பிரச்சினை அல்லவாம்

### அமைதி வழி சுதந்திரம் பெற்றூராம்; இன்றைய இளைஞரோ அவ்வழி விலகிச் செல்கின்றனராம்

'உலக நாடுகளுக்கு உபதேசிக்கிறோம்—உள்நாட்டில் அவமதிக்கிறோம்!

### 'பஞ்சலசீலம்' குறித்துப் பாரதப் பிரதமர்

புதுடில்லி, ஆக. 15—

"பஞ்சசீலக் கோட்பாடுகளை உலகிற்கு நாம் போதித்து வருகிறோம்; ஆனால் அதே நேரத்தில், உள்நாட்டிற்குள் நாம் அவற்றை மறந்துவிடுகிறோம்.

"கடந்த எட்டு மாதங்களில், பல விசித்திரமான காட்சிகளை நாம் கண்டோம். மாநில புது அமைப்பு விவகாரத்தில், சோதரரும் சோதரரும் அடித்துக் கொண்டதை நாம் பார்த்தோம்.

"பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை முன்பு எதிரிகளாகச் சந்தித்தோம்; இப்போது நண்பர்களாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம்முடைய சொந்தப் பிரச்சினைகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்ள நம்மிடத்தில் பொறுமையில்லை. சகோதரர்கள், ஒருவருக்கு எதிராக ஒருவர் சண்டையிட்டுக் கொள்வதைக் காண்கிறோம்!

"பிரிட்டிஷாருக்கு எதிராக நாம், ஒரு விரலைக்கூட அசைக்காமல், அவர்களுடைய துப்பாக்கிக் குண்டுகளை ஏந்திக்கொண்டோம்; அவ்வளவு அமைதியாக மக்கள் கிளர்ச்சிகளை நடத்துமாறு காந்தியார் அவர்களைப் பண்படுத்தியிருந்தார்; ஆனால் இன்றைய இளைஞர்கள், தங்கள் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த அமைதி வழியிலிருந்து வேறுபட்ட வழியில் செல்லுமாறு பழக்கப்படுத்தப்படுகின்றனர் என்றே தோன்றுகின்றது.

"மாநில புதுஅமைப்பு என்பது, ஏதோ ஒரு பெரிய அரசியல் விவகாரமோ, பொருளாதார விவகாரமோ அல்ல; இது ஒரு உணர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சினைதான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மக்களுக்கு இதில் சிரத்தை இருக்கிறது; அதனால் அவர்களுடைய உணர்ச்சிகள் தூண்டப்படுகின்றன. நாம் இந்த உணர்ச்சிகளை மதிக்கத்தான் வேண்டும். ஆனால், இந்தச் சிக்கலை, ஒருவருக்கு ஒருவர் தோள் தட்டுவதினாலேயோ, சர்க்கார் கட்டிடங்களை எரிப்பதினாலேயோ எப்படித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பது எனக்குப் புரியவில்லை?"

—என்று பிரதமர் நேரு, புதுடில்லி செங்கோட்டை முன் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

## உத்திர பிரதேச காங்கிரசில் பல கோஷ்டிகளிடையேயும் தகராறு

### பண்டித பந்த் முன்னிலையில் சண்டைகள்

தேர்தலுக்கு ஆள் பொறுக்குவதில் குஸ்தி!

லக்னோ, ஆக. 16—

உத்திரப் பிரதேச காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிச் சண்டைகள் பலமாக இருக்கின்றனவாம்.

பண்டித பந்த் டில்லியில் மந்திரியான பின்பு இந்த கோஷ்டிகள் ஒழிந்துவிடும் என்று கூறப்பட்டது; ஆனால் இப்போது இவை பெரும் அளவு வளர்ந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தேர்தல் வருகிறது—கோஷ்டிகளும் தோள் தட்டுகின்றனவாம்!

இப்போது ஆளும் கோஷ்டி நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் உபகுழுவிற்கு விரோதமானதாம்! இந்தத் தேர்தல் உபகுழுவோ, மாவட்டங்களிலிருந்து காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்குவதற்காக நியமிக்கப்படும் நபர்களைத் தங்களவர்களாகப் பார்த்து நியமித்துக் கொள்கிறதாம்!

இந்தச் செயல், பிரதேச தேர்தல் குழு உறுப்பினர் அனைவருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—8—'56 வியாழன்

# ஒன்பதாண்டுக்கால ஆட்சியில்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல் துறையில் இந்தியத் துணைக்கண்டம் விடுபட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இவ்வொன்பதாண்டுக் காலமாக காங்கிரஸ் கட்சியே ஆட்சிப் பொறுப்பில் இருந்தும் வருகிறது.

காங்கிரஸ் கட்சியின் ஒன்பது ஆண்டுக்கால ஆட்சியில் பொதுவாக இந்தியத் துணைக் கண்டமும், குறிப்பாக நமது திராவிடமும் பெற்ற நலன்கள் என்ன என்பது ஆராய்ந்து அறியத்தக்கது. அவ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெறும் உண்மையிலிருந்துதான், எதிர்காலத்தில் காங்கிரஸ் கட்சியின் தேவையையும் தேவையின்மையையும் நீர்மானிக்க வேண்டும்.

நீர்த் தேக்கங்கள், நீர் மின்சார உற்பத்தி நிலையங்கள், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், செயற்கை உரத் தொழிற்சாலைகள், வேறு பல நவீன இயந்திரத் தொழிற்சாலைகள் ஆகிய புத்தம் புதிய தொழில் ஏற்பாடுகளையும் வாழ்வு தரும் சாதனங்களையும் சென்ற ஒன்பதாண்டுக் காலத்தில் செய்து முடித்திருப்பதாகக் காங்கிரஸ் கட்சி பறைசாற்றிக் கொண்டு வருகிறது. அந்த நல்வாழ்வு சாதனங்கள் அனைத்தும் இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவலாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட வடநாட்டுப் பகுதியிலேயே அப்புத்தம் புதிய தொழில் ஏற்பாடுகள் பலவும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அதனாலேயே, அத்தொழில்களால் கிடைக்கக்கூடிய புதிய வாழ்வைப் பெரும்பாலும் வடநாட்டு மக்களே அனுபவித்து மகிழும் நிலையில் உள்ளனர்.

குறிப்பிட்ட வடநாட்டுப் பகுதியிலேயே உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழில் வசதிகளின் மூலம் கிடைக்கக் கூடிய நலன்களை, அப்பகுதியில் உள்ள மக்கள் அளவிற்கு அதிகமாகப் பெற்று மகிழ்வது கண்டு, திராவிடப் பகுதியில் உள்ள நாமும் மகிழ வேண்டும் எனக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் விரும்புகிறார்கள். வட நாட்டவருக்குச் செழுமையும் தென்னாட்டவருக்கு வறுமையும் இருக்கும் வகையில் தொழில் திட்டங்களை நிறைவேற்றலாமா எனக் கேள்வி எழுப்பினால், அதிலுள்ள நியாயத்தை உணர மறுத்து, அவ்வாறு கேள்வி எழுப்புவதையே பேத புத்தி எனச் சாட காங்கிரஸ் ஆளவந்தார்கள் கிளம்பிவிடுகின்றனர். அவ்வாறு சாடுவதின் மூலம், வேண்டுமென்றே தென்னாட்டைத் தேயச் செய்தும் அதே நேரத்தில் வடநாட்டை வாழச் செய்தும் வரும் தங்களுடைய ஓரவஞ்சனையை, பேத புத்தியை, பழுதுபட்ட மனப் போக்கை, திராவிடத்தாரின் கண்ணிலும் கருத்திலும் படாமல் மறைக்கக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் அரும்பாடுபட்டு வருகின்றனர்.

காங்கிரஸ் மேலிடத்தார் செயலாற்றிவரும் இந்த ஓரவஞ்சனை, பொருளாதாரத் துறையளவுடன் கட்டுப்பட்டுவிடவில்லை, அதைத்தாண்டி, வாழ்க்கைத்துறை ஒவ்வொன்றிலும் இந்த ஓரவஞ்சனைதான் கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கிறது.

வடக்கை வாழ்வு பெறச் செய்து தெற்கை நாசமுறச் செய்வது என்ற அடிப்படை நோக்குடன்தான் காங்கிரஸ் மேலிடத்தார் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை மெய்ப்பிக்க, முதல் ஐந்தாண்டுத் திட்டமும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் மறுக்கமுடியாத இரு சான்றுகளாகும்.

இந்த உண்மையை நாம் மட்டுமே சுட்டிக்காட்டவில்லை. காங்கிரஸ் மேலிடத்தாரை தலையில் தூக்கிவைத்து எப்பொழுதும் ஆடிக்கிடக்கும் சிலரும் கூட, இக்கருத்தை, வடநாட்டு ஆட்சியாளர்களின் ஓரவஞ்சனைப் போக்கைப் படம் போட்டுக் காட்டவும் துணிந்துள்ளனர்.

அரசியல் துறையிலும் காங்கிரஸ் மேலிடத்தாரின் போக்கு, ஜனநாயக வளர்ச்சிக்கான அடிப்படையைச் செப்பனிடக் கூடியதாக இருக்கவில்லை. ஜனநாயகத்தை வாயளவில் பேசிக்கொண்டே ஒரு கட்சி சர்வாதிகாரத்திற்கு ஆக்கம் தேடும் வகையிலேயே காங்கிரஸ் ஆளவந்தார்கள் செயல்பட்டுவருகிறார்கள். இத்துறையில் இந்தியத் துணைக் கண்டத்தில் உருவெடுத்துவரும் நிலை அச்சமூட்டுவதாகவே இருந்துவருகிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஜனநாயக சேவையும், வயது வந்தோருக்கு அளித்துள்ளதாகக் கூறப்படும் வாக்குரிமையும் இத்துணைக் கண்டத்தில் ஜனநாயகத்தை வேர்விடச் செய்வதாக இல்லை. இப்பொழுதுதான் புதிதாக வேர்விடக் கூடிய பருவத்தை அடைந்துள்ள ஜனநாயகப் பயிரைப் பிடுங்கி எடுத்து, காணப்படும் சிறுசிறு சல்லி வேர்களுக்கு வெந்நீர்விட்டு வளர்ப்பதுபோல் இருக்கிறது, காங்கிரஸ் கட்சியினரின் ஜனநாயகப் பெரும்பணி.

தங்களால் பாராட்டிப் புகழப்படும் காந்திய அறநெறி ஆக்கத்திற்குக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் செய்துவரும் சேவையும், அவர்களால் ஜனநாயக வளர்ச்சிக்குச் செய்யப்பட்டுவரும் சேவையையும் வெட்கித் தலைகுனியச் செய்துவிடக் கூடியதாகும். காந்திய அறவழியைச் செப்பனிடுவதற்குத் துப்பாக்கியின் துணையைப் பெரிதும் நாடுபவர்களாக இருந்து வருகிறார்கள், காங்கிரஸ் ஆளவந்தார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய இருநூறு ஆண்டு ஆட்சிக் காலத்தில் நடைபெற்றத் துப்பாக்கிப் பிரயோகங்களைக் காட்டிலும் அதிகப்படியான எண்ணிக்கையிலும், கூடுதலான கொடுமையிலும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஒன்பதாண்டு ஆட்சிக் காலத்தில், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன. மனித வேட்டை ஆடுவதும், இரத்த வெறிகொண்டு அலைவதும் இந்த காந்திய சீடர்களுக்குத் தொழுநோயாகப் போய்விட்டதே எனக் கருதும் வகையில், காங்கிரஸ் ஆளவந்தார்களின் துப்பாக்கி வெறி உருவெடுத்து இருக்கிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஒன்பதாண்டுக் கால ஆட்சி பாராட்டக்கூடியதாக இல்லை.

வடக்கை வாழச் செய்து தெற்கை வாழ்விழக்கச் செய்யும் ஓரவஞ்சனை ஆட்சியாக இருந்து வருகிறது.

ஜனநாயகத்தைக் கொலை செய்து சர்வாதிகாரத்திற்கு அடிகோலுவதாக இருக்கிறது.

காந்தியத்தைக் கொலை செய்து, துப்பாக்கியின் துணையுடன் சர்வாதிகாரிகளின் பயங்கர ஆட்சியை நிலைநாட்டுவதாக இருக்கிறது.

குடிமக்களின் உரிமைகளை உருக்குலைப்பதாக இருக்கிறது.

பகட்டிலும் படாடோபத்திலும் காலங்கழிப்பதாக இருக்கிறது.

ஒன்பதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் நாம் காணும் உண்மைகள் இவைகளேயாகும்.

# 'நம்மவருமல்ல-நல்லவருமல்ல-வல்லவருமல்ல வட நாட்டவர்'

## தொழில் தகராறு சட்டத்திற்கு திருத்தம்

'வேலையிலிருந்து தொழிலாளரை நீக்கத் தொழில் மன்ற உத்திரவு பெறவேண்டும்'

### மத்திய மந்திரி விளக்கம்

புதுடில்லி, ஆக. 15—

தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவது சம்பந்தமான ஒரு முக்கிய பிரிவைக் கொண்ட தொழில் தகராறு திருத்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரி, மாநிலங்கள் சபையில் ஒரு பிரேரபணை கொண்டுவந்த தொழிலாளர் நலத் துணை அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க முதலாளிகளுக்கு இந்த ஏற்பாடு உரிமையளித்துவிட்டதாக நினைப்பது தவறு; வேலையிலிருந்து ஒரு தொழிலாளர் நீக்கப்பட்டால் என்னென்ன நடைபெற வேண்டுமென்றுதான் அது ஏற்பாடு செய்கிறது. முதலாளிகள் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கினால், தொழிலாளர்கள் தான் நீதிமன்றத்திற்குப் போகவேண்டிய நிலை இப்போதிருக்கிறது; இனிமேல், முதலாளி ஒரு மாதச் சம்பளம் கொடுத்து தொழிலாளியை 'சஸ்பெண்ட்' மட்டுமே செய்ய முடியும்; பின்பு தொழில் மன்றத்தை அணுகி அதன் உத்திரவு பெற வேண்டும்; பின்னர்தான் வேலையிலிருந்து நீக்கமுடியும்."

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின்

## தேசீய மாநாடு

குடியரசு தலைவருக்கு அபேட்சகர் பொறுக்கும் பணியில் பிரதிநிதிகள்

சிக்காகோ, ஆக. 16—

இங்குள்ள சர்வதேச அரங்கில் சனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு 13-ந் தேதி ஆரம்பமாயிற்று. அடுத்த நவம்பர் 6-ந் தேதி நடைபெறவிருக்கும் அமெரிக்காவின் பொதுத் தேர்தலுக்கு சனநாயகக் கட்சியின் சார்பில் தலைவர், துணைத் தலைவர் அபேட்சகரைக் குறிப்பிடும் முக்கியப் பணியில் 4327 பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

குடியரசுக் கட்சியினர் அடுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## 'எப்படி ஒன்றாக இருக்க முடியும்?'

### வலங்கைமானில் அண்ணா கருத்துரை

வலங்கைமான், ஆக. 16—

"திராவிட நாடு வேண்டும் என்று நாம் கூறுகிறபோது, 'எப்படி நாட்டைப் பிரிப்பது?' என்று சிலர் கேட்கிறார்கள். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர்தான் அவர்கள் பிறந்தார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது—அவர்களின் நிலையை எண்ணி! அப்படியே திராவிடநாடு பிரிவினையை ஒத்துக் கொள்ள ஓரளவு எண்ணினாலும், 'வடநாடு—தென்னாடு என்று வித்தியாசம் கொள்வதா?'—என்று மீண்டுமொரு கேள்வியைக் கேட்கிறார்கள்.

"வடநாடு—தென்னாடு என்று கூறுவதே முதல் வித்தியாசம்; வடநாட்டார் தென்னாட்டார் என்பதே—இரண்டும், இரண்டு பெரிய இனம்; அவர்கள், மொழி, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, தெய்வ வழிபாடு ஆகிய எல்லாவற்றிலுமே மாறுபட்டவர்கள்; இவைகளையெல்லாம் நாம் கண்கூடாகப் பார்க்கும்போது 'நம்மவர்கள்' என்று அனுதாபம் கொள்ளும் வகையிலே அவர்கள் இல்லை.

"'நம்மவர்கள்'தான் இல்லை; 'நல்லவர்களா' என்று பார்த்தால் அதிலும் பூஜ்யம்! சுமார் எட்டு ஆண்டுகட்கு முன்பு பஞ்சத்தால் ஆந்திராவும், தமிழ் நாடும் பாதிக்கப்பட்டுத் தொல்லையுற்ற காலத்திலே, எந்தவகையிலும் ஒத்துழைக்காத அவர்கள், ஏளனமாகப் பேசி நம்மை வஞ்சந் தீர்த்துக் கொள்வதுபோல, 'பஞ்சமா—அரிசி விளையவில்லையா? பருத்திக் கொட்டையைக்கூட உண்ணலாமே?'—என்று சிபாரிசு செய்தார்கள்—அந்த நல்லவர்களிலே முதன்மையான கனம் முன்ஷி!—இவ்வளவு பொறுப்பான அவர் வேறு யாருமல்ல—நம்முடைய வரிப் பணத்திலே வளமாக்கப்பட்ட மந்திரி — உணவு மந்திரி!

"சமீபத்திலே புயலடித்துத் தொல்லைப்பட்டோமே—எவ்வளவு பேர்கள் நமக்காக உதவி செய்தார்கள்? 'ஒரே குடும்பம்—ஒரே நாடு—ஒரே பாரத மக்கள்' என்று எண்ணியா கைகொடுத்து உதவினார்கள்? மலேயா, சைகோனிலிருந்து வந்த பணமளவுகூட வடநாட்டினர் நமக்குக் கொடுத்து உதவவில்லையே! இவ்வாறு நமது துன்பத்தைப் பற்றியோ, நம்மைப் பற்றியோ அக்கரையில்லாது வாழும் அவர்கள் நம்மைப் பொறுத்தவரை நல்லவர்களா?

"'நல்லவர்கள்'தான் இல்லை—'வல்லவர்'களா என்று பார்ப்போம்; இந்த தேச சரித்திரம் என்ன சொல்லுகிறது? அலெக்சாண்டர் வந்தான்—தோற்றுப்போனார்கள்; கஜினி முகம்மது வந்தான்—தோற்று ஓடினார்கள்; அல்லாவுதின் வந்தான்—தோற்றார்கள்; தைமூர் வந்தான்—ஔரங்கசீப் வந்தான்—குத்புதீன் வந்தான்—தோற்றுக்கொண்டே ஓடினார்கள்; அக்பர் வந்தான்—பெண் கொடுத்து சம்பந்தம் கொண்டார்கள். இவ்வாறு அவர்கள், வாழ்க்கை முழுவதிலுமே தோற்றவர்கள்தானே! வல்லவர்களாக இருக்க முடிந்ததா அவர்களால்? இவ்வாறு எல்லாவகையிலும் அன்றிலிருந்து இன்றுவரை அவர்களால் தென்னாட்டு மக்களான நமக்கு எந்த விதப் பலனுமில்லாதிருக்கையில் நம்முடைய எல்லா வளங்களும் அவர்களுக்குப் பயன்படுவானேன்? நாம் தாழ்வுறுவானேன்?

"அதனால்தான் நாங்கள் கேட்கிறோம்—'எங்கள் நாட்டை எங்களிடம் கொடுங்கள்'—என்று! 'திராவிட நாடு' கேட்பது தவறா? திறமையோடு பெருமையாக வாழ நாம் எண்ணுவது தவறா? மாற்றுக் கட்சிக்காரர்கள் நன்றாக உணர வேண்டுகிறேன். உணர்ந்து எங்களின் இந்த தேசீயப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

"'திராவிட நாடு பிரிந்தால் பாதுகாப்பாக வாழ முடியுமா?—உலக அரங்கிலே யுத்த பயம் இருந்துவரும்போது இந்தியாவிலிருந்து பிரிந்த சிறு நாடாகிய திராவிட நாட்டை மற்ற நாடுகள் தாக்கினால் போரிட்டு வெல்ல வல்லமையுண்டா?'—என்றும் சிலர் சில சமயம் நம்மைக் கேட்கிறார்கள். நான் அவர்களுக்குக் கூறுகிறேன்:—உலக அரங்கிலே ஏகாதிபத்திய வெறி பிடித்த வல்லரசுகளிலே ஒன்றான—படை பலம், பண பலம் கொண்ட பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து, ஒரு நாளையில் சூயஸ் கால்வாயைக் கைப்பற்றி சுதந்திர தேசத்தின் உடைமையாக்கிய எகிப்தை—எகிப்திய ஜனாதிபதி நாசரை என்ன செய்தார்கள் பிரிட்டிஷார்? நினைத்தால் அழித்துவிட முடியும் என்று வீராப்புப் பேசுகிற அவர்கள், அணுகுண்டு போட்டு அழித்தா விட்டார்கள்? 'சிறிய நாடு என்றால் நினைத்ததைச் செய்துவிட முடியும்' என்ற அகம்பாவத்தை ஒழித்துக் கட்டிய நாசரை இன்று உலகமே புகழ்கிறது. ஏன்? நேர்மையான தனக்குச் சுதந்திரமுள்ள—தமது நாட்டுக்குச் சேரவேண்டிய இலாபகரமான வருமானமுள்ள நிறுவனத்தை அரசாங்க உடைமையாக்கினார். இது முற்றிலும் நேர்மை என்று முக்கியமான நாடுகள் யாவும் ஒப்புக்கொள்கின்றன. உலகநாடுகளின் நிலைமை இவ்வாறிருக்க தீமையான காரியங்களையா நாம் செய்ய எண்ணுவோம்? அதனால் மற்ற நாடுகள் திராவிட நாட்டைக் கைப்பற்ற எண்ணும் என்று ஏன் நினைக்க வேண்டும்? அவ்வளவு கோழைகளல்ல—நாம்!"

—இவ்வாறு, அண்ணா அவர்கள், வலங்கைமானில் நடந்த 11-ந் தேதியன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# 'போதுமான அளவு சிமெண்டு ஒதுக்கப்படவில்லை'

## 'சர்க்கார் வேலைகள் தடைபடுகின்றன'

டில்லியிடம் சென்னை சர்க்கார் முறையீடு

சென்னை, ஆக. 14—

சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் சிமெண்டு, அதன் தேவைக்குப் போதுமானதாக இல்லையென்று டில்லியிடம் சென்னை சர்க்கார் முறையிட்டிருப்பதாக மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

போதுமான சிமெண்டு கிடைக்கப் பெறாததால், சில சர்க்கார் வேலைகளும் இப்போது தடைபட்டுள்ளன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும், மாநிலத்தில் உள்ள மூன்று சிமெண்டு தொழிற்சாலைகள் ஆண்டுதோறும் 6,65,000 டன் சிமெண்டு உற்பத்தி செய்தாலும், இந்த உற்பத்தி, மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானவை என்று டில்லி கருதவில்லையே அதிக சிமெண்டு ஒதுக்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தத் தொழிற்சாலைகள், தங்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டிருப்பதுடன், வேறு புதிய தொழிற்சாலைகள் துவக்க வேண்டுமெனவும் சர்க்கார் முதலாளிகளைக் கேட்டுள்ளது என்றும், அப்படித் துவங்கினால் சர்க்கார் எல்லாவித உதவிகளும் அளிக்கும் என்றும் மந்திரி பகன்றிருக்கிறார்.

## சாகும்வரை உண்ணாவிரதம்!

மகா குசராத் மாநிலம் அமைக்க

அகமதாபாத், ஆக. 14—

'ஒரு மொழி மகா குஜராத் மாநிலம் அமைக்க வேண்டும்; போலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்' என்பதற்காக குசராத் மாநில இந்து மகாசபை செயலாளரான வசந்தராவ் கோல்வால்கர் என்பார் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருக்கிறாராம்.

அகில இந்தியத் தலைவரான சட்டர்ஜியைக் கலந்துகொண்டு இந்து மகாசபை, சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றும் நடத்தவிருக்கிறதாம்.

## கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கு!

இலவச மருத்துவ உதவியாம்

திருவனந்தபுரம், ஆக. 14—

திரு-கொச்சி சர்க்காரில் பணிபுரியும் கெசட் பதிவு பெற்ற அதிகாரிகள், ஆக. 15-ந் தேதி முதல் இலவச மருத்துவ சிகிச்சை வசதி பெறுவர் என்று தெரியவருகிறது.

அந்த அதிகாரிகளும் அவர்கள் குடும்பத்தவரும் மருத்துவ மனைகளில் தங்கி இலவச சிகிச்சை பெறலாம்; ஆனால் உணவுக்கு மட்டும் அவர்கள் பொருள் தரவேண்டும்.

கெசட் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கு வீட்டிலேயே வந்துகூட டாக்டர்கள் சிகிச்சை செய்வராம்.

## அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 19 : காலை - பேளுகுறிச்சி
மாலை - இராசிபுரம்
20 : காலை - சேலம்
மாலை - குளத்தூர்

துணைப் பொதுச்செயலாளர்

## என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 17 : திண்டுக்கல்
18 : சின்னத்தம்பி பாளையம்
19 : காலை - பேளுகுறிச்சி
மாலை - இராசிபுரம்
20 : காலை - சேலம்

## திருமண ஊர்வலத்தில் தேவதாசி நடனம்

தடை விதிக்கும் மசோதா ஆந்திர சட்டசபையில் நிறைவேற்றம்

கர்னூல், ஆக. 14—

திருமண ஊர்வலத்தின் முன்பாக பெண்கள் நாட்டியம் ஆடுவதைத் தடுக்கிற மசோதா ஒன்று ஆந்திர சட்டசபையில் நிறைவேறியுள்ளது.

'திருமணம் அல்லது வேறெந்த ஊர்வலத்தில் நாட்டியம் கூடாது' என்பது அசல் மசோதா; ஆனால், இராஜேசுவரராவ் என்ற காங்கிரஸ் உறுப்பினர் கொண்டுவந்த திருத்தப்படி, 'திருமண ஊர்வலத்தில் மட்டும் நடனம் கூடாது' என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மசோதாவை தாக்கல் செய்து மந்திரி சந்திரமௌலி பேசும் போது, 'பொது இடங்களில் தேவதாசிகள் நடனம் ஆடுவதைத் தடுக்குமாறு மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன; இது போன்ற நிகழ்ச்சிகள் கண்ணியக் குறைவானவையாக இருக்கும் என நான் கருதுகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"தேவதாசிகள் மட்டுமல்ல; பொதுவாகப் பெண்களே திருமண ஊர்வலங்களில் நாட்டியமாடக் கூடாது என்றுதான் மசோதா தடை விதிக்கிறது என்பதால், எந்தவிதப் பாரபட்சமும் காட்டப்படுவதாகக் கூறமுடியாது" என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

"திருமண ஊர்வலத்தில் தேவதாசி நடனம் தேவை இல்லை; ஆனால், திருமணத்தில் நடனம் நடைபெறுவது பரம்பரையாக வந்துள்ள பழக்கம்; முதன் மந்திரி கோபாலரெட்டியின் திருமணத்தில்கூட இந்த நடனம் நடைபெற்றது" என்று உதவி சபாநாயகர் எடுத்துரைத்தாராம்.

## மைசூருக்கு ஜனாதிபதி ஆட்சி வேண்டுமாம்

பெங்களூர், ஆக 15—

இந்திய சேவா சங்கத்தைச் சேர்ந்த பி. கோதண்டராவ் என்பவர், மைசூர் மாநிலத்தில் ஜனாதிபதியின் நேரடி ஆட்சி வேண்டுமெனக் கோரியுள்ளாராம்.

அவர் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:—

"மைசூர் அரசியல்வாதிகளில் பெரும்பாலானோரின் பேராசைகளிலிருந்து மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் — பொது வாழ்வுத்துறையில் ஏற்பட்டு வரும் ஒழுக்கக்கேடு மேலும் வளராமல் தடுக்கப்பட வேண்டுமானால், மைசூரில், ஜனாதிபதியின் ஆட்சி ஏற்படவேண்டும்."

## இரயில்வேக்கு ரூ. 40 இலட்சம் வருமான நஷ்டம்

அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் விளைவு

புதுடில்லி, ஆக. 14—

"மத்திய இரயில்வே, தென்கிழக்கு இரயில்வே, வடக்கு இரயில்வே இவற்றில் அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் விளைவாக சர்க்காருக்கு ரூ. 40 இலட்சம் வருமானம் பாழாகியது,"

என்று, இரயில்வே உதவி மந்திரி ஓ. வி. அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"இரயில்வே தொழிலாளர்கள், ஒரு சில மணி நேரம் மட்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அதனை சர்க்கார் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை; ஆனால், வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் பழக்கம் அதிகரித்து வருவதால் இனி வேலை நிறுத்தத்தின் விளைவுகளுக்கு தொழிலாளர்களே பொறுப்பேற்க வேண்டிவரும் என்று சர்க்கார் எச்சரித்திருக்கிறது," என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

### எதிர்பார்க்கிறார்களாம்!

புதுடில்லி, ஆக 15—

'அம்பர் சர்க்கா' மூலம் 1956—57-ம் ஆண்டில் மூன்று கோடி கெசம் துணி உற்பத்தியாகுமென எதிர்பார்ப்பதாக, மத்திய உற்பத்தி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

### முடிவுசெய்துவிட்டனராம்!

புதுடில்லி, ஆக. 14—

சென்னை — சேலம் மாவட்டத்தில் 10,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு டில்லி சர்க்கார் முடிவெடுத்திருப்பதாக மக்கள் சபையில், தோழர் எஸ். வி. இராமசாமியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, கனரகத்தொழில் இலாகா மந்திரி எம். எம். ஷா தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றிய நிபுணர் குழு அறிக்கை, இன்னும் ஒரு மாதத்திற்குள் அரசாங்கத்திற்குக் கிடைத்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கோவில் உச்சி இடிந்தது!

திருவனந்தபுரம், ஆக. 12—

நேற்றிரவு திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலின் கோபுரத்தின் மேல்உச்சிப் பகுதியில் ஒரு பாகம் இடிந்து விழுந்துவிட்டது. இதனால் 7 நிலை மாடங்கொண்ட கோபுரத்தின் உட்பகுதிக்கு சிறிது சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த 100 அடி உயரமுள்ள கோபுரம் 200 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. இதன் மொத்தச் சேதம் எவ்வளவு என்று இன்னும் மதிப்பிடப்படவில்லை.

பத்மநாப சுவாமியைக் குல தெய்வமாகக் கொண்ட திரு-கொச்சி இராசப் பிரமுகர் இப்போது குற்றாலத்திலிருக்கிறார். கோபுரத்திற்கேற்பட்ட சேதம் குறித்து அவருக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

## சென்னை நகர மாணவர்களுக்கு

"சென்னை நகர தி. மு. கழக மாணவர் கிளை கமிட்டிக் கூட்டம் சென்னை இராயபுரம், 'அறிவகத்'தில், 21-8-56 காலை 10 மணிக்கு நடைபெறும்; அதுபோது, 5-8-56ல் நடைபெற்ற 'தேர்தல் நிதி அளிப்பு விழா' கூட்ட வரவு-செலவுகணக்கு, மற்றும் இதர பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும்.

"கூட்டத்திற்கு, தி. மு. க.—மாணவர் கிளையின்பால் அக்கறை கொண்ட எல்லா மாணவர்களையும் கலந்துகொள்ள வேண்டுகின்றேன்.

"சென்னை நகரிலுள்ள கல்லூரி—பள்ளிகளின் பிரதிநிதிகள் சென்னை நகரைச் சார்ந்த கிளைக் கழகங்களின் நிர்வாகிகள், சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் இதனையே அழைப்பாகக்கொண்டு பங்கு கொள்ள பணிவுடன் அழைக்கின்றேன்."

என்று, தி. மு. க.—மாணவர் கிளை அமைப்பாளர், டி. கே. பொன்னுவேலு அவர்கள் அறிவிக்கிறார்.

குறிப்பு:—17—8—56ல் நடைபெறவிருந்த கூட்டமே 21—8—56ல் நடைபெறுகிறது.

## இந்திய நிர்வாகத்தின் சீர்கேடுகள்

### துரிதமாக வேலை நடப்பதற்கு யோசனைகள்

அமெரிக்க நிபுணர் அறிக்கை

புதுடில்லி, ஆக. 15—

"சரியான முறையில் நிர்வாகம் சீர்திருத்தி அமைக்கப்பட்டாலன்றி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட முடியாது,"

என்று, அமெரிக்கப் பொது நிர்வாகத்துறை நிபுணரான பால் ஆப்பிள்பி தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

"சிறு நினைப்புகளைவிட்டு, விவகாரங்களை அணுகும் முறையை, மக்கள் சபை பொதுவான வழிகாட்டும் நிலைக்கு உயர்த்தினாலன்றி இந்தியாவின் எதிர்காலம் கேடுற்றதாக அமையும்,"

என்றும் அவர் எச்சரித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

"உயர்ந்த அதிகாரம் படைத்தவர்களிடமிருந்து கீழேயுள்ள அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் ஒதுக்கப்படவேண்டும்; இப்படி அதிகாரங்கள் கீழ்நோக்கி வருவதால், பொறுப்புகள் விரிவாகும்; இதனால் அனாவசியமான காலதாமதம் குறைக்கப்பட முடியும்" என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

"இந்திய நிர்வாக முறையில் காணப்படும் குறை எல்லாம், ஏதாவது ஒன்று செய்யப்படுமுன், ஒவ்வொருவராலும், ஒவ்வொரு விவகாரத்திற்கும் ஒவ்வொருவரிடத்திலிருந்து ஒப்புதல் கோரப்படுவதுதான்.

"இந்தியா இப்போது, யுத்தகாலம் போன்ற ஒரு நெருக்கடியான — அவசரமான நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது; நெருக்கடியான நேரங்களில் துரிதமாக முடிவுகள் எடுப்பதும் துரிதமாகச் செயல்படுவதும் மிக அவசியமாகும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

"காலனி ஆட்சியிலிருந்து தொடருகிற ஏற்பாடுதான் ஆடிட்டர்-ஜெனரல் ஒருவர் இருப்பது. முடிவுகள் எடுத்து, அதிகாரிகள் செயல்பட விரும்பாமல் போய்விடுகிற பரவலான அதிருப்திக்குக் காரணமே இந்த ஆடிட்டர்-ஜெனரல்தான்,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

இன்னும் அவர், நிர்வாகத் துறையில் செய்யப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்து யோசனைகள் வழங்கியுள்ளாராம்.

# வடநாட்டில் மேலும் ஆறு புதிய பல்கலைக்கழகங்கள்

## இரண்டாம் திட்ட காலத்தில் அமையுமாம்

புதுடில்லி, ஆக. 15—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆறு புதிய பல்கலைக் கழகங்கள் துவக்கப்படும்"

என்று உதவி கல்வி மந்திரி டாக்டர் மனமோகன்தாஸ் மக்கள்சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆறு பல்கலைக்கழகங்களும் வடநாட்டிலேயே அமைகின்றன.

குருக்ஷேத்திரா பல்கலைக்கழகம் (பஞ்சாப்), கோரக்பூர் பல்கலைக் கழகம், வாரணாசி சமஸ்கிருத விஸ்வவித்தியாலயம்-காசி (இரண்டும் உ. பி.), ஜபல்பூர் பல்கலைக் கழகம் (மத்தியப் பிரதேசம்), விக்ரம பல்கலைக்கழகம் (உஜ்ஜயினி), ராஞ்சி பல்கலைக்கழகம் (பீகார்) —இவைதான் அந்த ஆறு பல்கலைக்கழகங்களுமாகும்.

'துவக்கப் பள்ளிகள், இடைநிலைப்பள்ளிகள் இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் பல்கலைக்கழகங்களை அதிகரிப்பது எவ்வகையில் நியாயமாகும்?' என்று கேட்கப்பட்டபோது இவை, திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவை என்றும், இவை துவக்குவதுபற்றி பல்கலைக்கழக மானியக் கமிஷன் இன்னும் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் மந்திரி விளக்கம் தந்திருக்கிறார்.

### 'அமைச்சரவையில் விவாதிக்கப்படவில்லை'

சென்னை, ஆக. 15—

மேல் (சட்ட)சபையில், திரு வி. இராமசாமியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், விவசாய அமைச்சர் பக்தவத்சலம், தட்சிணப் பிரதேச அமைப்புப் பற்றி இந்திய சர்க்காரிடமிருந்து கடிதம் ஏதும் சென்னை சர்க்காருக்கு வரவில்லையென்றும், இப்பிரச்சினை குறித்து சென்னை அமைச்சரவையில் விவாதிக்கப்படவில்லையென்றும், சட்டசபையுடன் கலந்தாலோசிக்காமல் இதுபற்றிய ஒரு முடிவை சர்க்கார் செய்யாது என்றும் கூறியுள்ளார்.

## தேர்தல் நிதி அனுப்புவோர் கவனிக்க:

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு பணம் அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

## உணவுப் பொருள்களை சேமித்து வைக்க!

புதுடில்லி, ஆக 14—

சேமித்து வைப்பதற்காக இந்திய சர்க்கார் ரூ. 80,48,00,000-த்திற்கு உணவுப் பொருள்கள் வாங்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த ஆண்டில் 17,65,900 டன் கோதுமையும், 7,00,000 டன் அரிசியும் இறக்குமதி செய்யப்படுமாம். இவைகளைச் சேமிப்பதின் மூலம் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து ஏறிய விலைகளைக் குறைக்க முடியும் என்று சர்க்கார் நம்புகிறதாம்.

இதற்கான மானியக் கோரிக்கையை மக்கள்சபையில் மந்திரி எம். சி. ஷா எழுப்பியிருக்கிறார்.

# சமநீதி கோருவது குரோதமாம்!

## சமத்துவம் பேசுவது பகை வளர்ப்பதாம்!

## பிறப்பில் உயர்வு-தாழ்வைப் பேணிக் காப்பதே சுயராஜ்யமாம்!

### பகையை மூட்டுகிருர் - துவேஷத்தைப் பரப்புகிருர் - சக்ரவர்த்தியார் !

*வேற்றுமையை வளர்க்கிருர்—விஷத்தைத் தூவுகிருர்—ஆச்சாரியார் !*

**குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டக் கருத்துக் கொண்டுள்ளவரும், அதற்காகவே தாம் 'அவதாரம்' செய்திருப்பதாகப் பறைசாற்றிக் கொண்டும், அதிகாரத்திலிருந்தாலும் அதை இழந்திருந்தாலும் அதற்காகப் பெரிதும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தீவிரமாகப் பணியாற்றி வருபவருமான சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், சுதந்திர தின செய்தி என்ற பெயரால் தமது ஜன்ம குணத்தைக் காட்டியுள்ளார் — தமிழ்ப் பெருங்குடி மக்களின் உரிமை வேட்கையை பழித்துப் பேசியுள்ளார் ; அதன் சிறு விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது :—**

"மக்களில் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு எதிராக துவேஷமும் பகையும் மூட்டப்படுகின்றன. இந்தத் துவேஷத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் அல்லாது நிர்மாண வேலைகள் எதுவும் நாட்டில் நடைபெற முடியாது.

"தங்கள் உள்ளங்களில் அடைபட்டுக் கிடக்கிற அழுக்கையும் குறுகிய புத்தியையும். அரசியல் என்ற கவர்ச்சிகரமான பெயரால், நம்மைச்சுற்றி மக்கள் கக்கிவிடுவதை நாம் கண்டு வருகிறோம். நம்முடைய தலைவர்கள் இன்றும் உயிருடன் இருப்பார்களானல் அவர்கள் இதற்காக நிச்சயமாகக் கண்ணீர் சிந்துவர், இப்பொழுது தரையில் சிந்துகிற சிறுசிறு மழைத்துளிகளே, தலைவர்களின் ஆவி நம்மீது சிந்துகிற கண்ணீர்த் துளிகளாக இருந்தாலும் இருக்கக்கூடும்.

"நம்முடைய பிரதமர் பொதுவாக அரசாங்கத்தைப் பரிபாலனம் செய்து வருகிற முறையையும், உலக அரங்கில் இந்த நாட்டிற்குப் புகழும் பாராட்டும் தேடித்தரும் நேர்த்தியையும் கண்டு அவர்கள் மகிழ்வர். ஆனல், அவர்கள் நமது நாட்டிற்குள் காண்பது என்ன? குடும்பச் சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்படுகின்ற சச்சரவைப் போன்று, அங்குமிங்குமாக சில சிறுசிறு நிலப்பரப்புகளுக்காகத் தங்களுடைய பிள்ளைகள் தங்களுக்குள்ளாக சண்டையிட்டுக் கொள்வதையும், ஒருவர் கழுத்தை மற்றொருவர் நெரிக்க முயல்வதையும் அவர்கள் காண்கிருர்கள்.

"நமது மக்கள் மட்டுமே இவ்வாறு சண்டை போட்டுக்கொள்கிருர்கள் என்பதில்லை. நம்முடைய இராஜ்ய அரசாங்கங்கள், இந்தச் சண்டையை அணையவிடாமல் பார்த்துக்கொள்வதில் தீவிர பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன. மக்கள் அனைவரின் விவகாரங்களையும் கவனித்துக்கொள்வதற்காகவே நாடு முழுதும் பிரிக்க முடியாத ஒரே அடிப்படையில் நிர்வகித்து வரப்படவேண்டும் என்பதை கொஞ்சமும் உணர்ந்துகொள்ளவில்லை. அங்குமிங்குமாகக் கிடக்கின்ற சிறுசிறு நிலப்பரப்புகளுக்காக தனித்தனியாக இராஜ்யங்கள் சண்டை பிடித்துக்கொள்வது, ஒரு நிலச் சொந்தக்காரர், தன்னுடைய சொந்த நலத்திற்காக அந்த நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதுபோல, அவ்வாறு சண்டைபோட்டு பெறுகின்ற நிலப்பகுதிகளை, அந்தந்த இராஜ்யங்களே சொந்தத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது எனப் பொருள்படுமா? கண்டிப்பாக அவ்வாறு பொருள் படாது.

"ஒரு நிலப் பரப்பு ஒரு இராஜ்யத்தின் பகுதியாக்கப் படுமானல், அப்பரப்பின் தேவைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு குறிப்பிட்ட அந்த இராஜ்யத்திற்குக் கட்டாயமாகிறது என்பதுதான் பொருளாகும்; இதுதான் ஒரு அரசாங்கத்தின் அடிப்படை செயல் முறை கோட்பாடாகும். இன்று சிறு நிலப் பகுதிகளுக்காக சண்டை போட்டுக்கொள்ளும் சில இராஜ்யங்கள், இந்த உண்மையின் பொருளை உணர்ந்திருக்கின்றனவா என நான் வியப்புறுகிறேன்.

"இந்த விரும்பத்தகாத நடைமுறை கண்டு நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்ட தலைவர்கள் என்ன கருதுவார்கள் என்பதைப் பற்றி, ஒரு நாஸ்தீகனுக இருந்தால் நான் ஒன்றும் கவலை கொள்ளமாட்டேன். ஏனெனில், நம்முடைய நடவடிக்கைகளை நோக்குவதற்கு அவர்களுடைய ஆவி இப்பொழுது இல்லை என என்னுல் இலகுவாகத் தீர்மானித்துக் கொள்ளமுடியும். ஆனல், துரதிருஷ்டவசமாக நான் அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை உடையவன். ஆதலால், இன்று நாம் எவ்வாறு நடந்துகொள்ளுகிறோம் என்பதை ஆர்வத்துடன் அவர்கள் கவனித்துக்கொண்டு இருப்பார்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை உடையவனுக இருக்கிறேன்."

*—இவ்வாறு கூறியுள்ள இராசகோபாலாச்சாரியார் அவர்கள், குசராத் கலவரம் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, தம்முடைய சென்ம குணப்படி தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்கள் மீதும் காய்ந்திருக்கிருர்—*

"மராட்டியத்தில் நடைபெற்றது போன்றும், குசராத்தில் நடைபெற்றுக்கொண்டு இருப்பது போன்றும், இங்கு (தமிழ் நாட்டில்) இன்று நிகழாமல் இருக்கக்கூடும்; ஆனல், நம்மிடையில் இங்கு உள்ள பலருடைய இருதயங்களில் மிகுதியான குரோதமும் பலாத்காரமும் அடைபட்டுக்கிடக்கின்றன. காலாகாலத்தில் அதை ஒழிக்க நாம் அனைவரும் தக்க நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறிவிடும் பட்சத்தில், பயங்கரமான எரிமலைபோல் அது கண்டிப்பாக வெடித்தே தீரும்.

"மக்களில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர், அல்லது பொறுக்கி எடுத்த சிலர், அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியின நன்மைக்காகவா இந்த சுயராஜ்யம் பெறப்பட்டது ? மக்கள் அனைவரின் நலனுக்காகவே சுயராஜ்யம் பெறப்பட்டுள்ளது.

"மக்களில் குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கு எதிராகக் குரோதத்தையும் பகையையும் பிரச்சாரம் செய்வது தங்களுடைய பிறப்புரிமை எனப் பலர் வாதாடுகின்றனர், தினம் தினம் இக் குரோதப் பண்பாடுவதையே அடிப்படை இலட்சியமாகக் கொண்டு சில செய்தித் தாள்கள் செயல்பட்டு வருகின்றன.

"இளைஞர்களிடை, இந்தக் குரோத விதையை அவ்விதழ்கள் வெளிப்படையாகவும் உருப்படியாகவும் தூவி வருகின்றன; அதன் பலனுக இவ்வகையான தத்துவ போதனைக்கு மாணவர் உலகம் சிறப்பான இலக்காக ஆக்கப்பட்டு இருக்கிறது. அத்தகு பிரச்சாரத்தில் தவறு எதுவும் இல்லை எனக் கருதியும், அது தங்களுக்கு வேலை தேடித்தரப் பயன்படும் என நம்பியும், நம்முடைய இளைஞர்களில் சிலர், அதற்கு மனமுவந்து பலியாகிவிடுகின்றனர்."

---

## இராசிபுரத்தில் அண்ணு

நிகழ்ச்சிகள்

★

ஆக. 19 : காலை 6 மணி : நகர தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. சீனிவாசன் திருமணத்திற்குத் தலைமை வகித்தல் ;

காலை 9 மணி : பேளுக்குறிச்சி தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் புதல்வன் தோழர் காங்கையன் திருமணத்திற்குத் தலைமை வகித்தல் ;

மாலை 6 மணி : புது சந்தைப் பேட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம். (துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொள்வார்.)

---

## கழகக் கூட்டம்

★

சின்னத்தம்பிபாளையம் :
மாரியம்மன்கோயில் திடல்
18—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
டி. எஸ். தங்கவேலு

பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். அப்பாவு

---

### அமெரிக்க ஜனநாயகக்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வாரம் சான்பிரான்சிஸ்கோவில் தம் அபேட்சகரைக் குறிப்பிடுவார்கள்.

அமெரிக்காவிலிருந்தும் உலகத்திலிருந்தும் வந்துள்ள 1,500-க்கு அதிகமான செய்தி நிருபர்கள் இம் மாநாட்டின் நடவடிக்கைகளை கவனிக்கின்றனர்.

இம்மாநாடு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும்போது, மாநாட்டில் பிரதிநிதிகளாகவோ அல்லது மாற்றுப் பிரதிநிதிகளாகவோ 665 பெண்கள் கலந்துகொள்வர் சனநாயக மாநாட்டில் உத்தியோக அந்தஸ்துடன் கலந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை இதுவே அதிகமாகும்.

---

## புளியங்குடியில் அண்ணு கருத்துரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

11—8—56 மாலை 5½ மணிக்கு அண்ணு அவர்கள், வலங்கைமானுக்கு வருகை தந்தார்கள்.

5-45 மணிக்கு, வலங்கைமான் உயர்நிலைப் பள்ளியில் மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் திரு கோபாலன் தலைமையில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

'தமிழ்—நேற்று இன்று நாளை' என்ற பொருள்பற்றி அண்ணு அவர்கள் சிறப்புரையாற்றினர்.

பள்ளிக்கூடம் இடம்கொள்ளாத அளவு கூட்டம் கூடியிருந்தது.

சிறப்புக் கூட்டம் முடிவுற்றதும் ஊர்வலம் துவங்கிற்று வாண வேடிக்கைகள் நடைபெற்றன; அதையொட்டி உறுமி மேளம், இராசகிரி தாசன் குழுவினரின் 'பாண்டு' இசையும், அடுத்து நாதசுர வித்வ ரதன எஸ். ஏ. செளந்திராசன் குழுவினரின் நாதசுர இசையும் நடைபெற்றது.

சுமார் 300 சேவாதளத் தொண்டர்கள் முன்வர, திறந்த காரிலே மலர்மாலையோடு அண்ணு கைகூப்பி நிற்க, ஊர்வலம் நகரத் தொடங்கிற்று.

பல தெருக்கள் தாண்டி கடைத் தெருவிலே ஊர்வலம் வரும்போது மக்கள் வெள்ளம் கட்டுக்கடங்கவில்லை ; போக்கு வரத்துக்கள்கூட அப்படியே நிலைநின்று விட்டன

இறுதியில் ஊர்வலம் சேணியர் தெரு பந்தலை வந்தடைந்தது.

பொதுக்கூட்ட ஆரம்பத்தில் தோழர் சுந்தரேசன் இன்னிசை முழக்கினர்.

கூட்டத்திற்குத் தோழர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்கினர். தோழர் அ. பொன்னம்பலனர் சிறிதுநேரம் பேசியதும், இறுதியில் அண்ணு அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அண்ணு அவர்களுக்கு ஏராளமான கைத்தறித் துண்டுகளும், மலர்மாலைகளும், இரு வர்ணக் கொடித் துணி மாலையும் அணிவிக்கப்பட்டன.

---

### உத்திர பிரதேச......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

*அதிருப்தியைத் தந்திருக்கிறதாம் !*

மொத்தம் உள்ள 51 மாவட்டங்களிலிருந்து காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்க 60 பேர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும், இந்த 60 பேர்களைத்தான் தேர்தல் உபகுழு தம் மிஷ்டம் போல நியமிப்பதாக இந்த உபகுழுவை நிறுவிய பிரதேசத் தேர்தல் குழுவினர் அதிருப்திப் பட்டுக்கொண்டனராம்!

இந்த போட்டி கோஷ்டிச் சண்டைகள், அகில இந்தியக் காங்கிரசின் பிரதிநிதிகளாக பிரதேச தேர்தல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பண்டித பந்த், கந்துபாய் தேசாய், மாதவன் நாயர் ஆகியோரின் முன்னிலையிலேயே தலைவிரித்தாடியிருக்கின்றன.

---

## நாளை !

ஒய்.எம்.சி.ஏ. (எஸ்பிளனேட்) பட்டி மன்றத்தில், **17-8-56** மாலை 5-மணியளவில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

---

### சென்னை 14-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டம்

18—8—56 இரவு 7 மணிக்கு, எண் 40, பத்திரையன் தெருவிலுள்ள கிளைக் கழகக் கட்டிடத்தில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

---

## உணவுப் பொருள்கள் விலை ஏற்றம்

'தடுக்கப்பட்டுவிட்டது' என்கிருர் மத்திய மந்திரி

'உணவுப் பொருள்கள் விலை ஏறுமுகத்தில் சென்றுகொண்டிருந்தது தடுக்கப்பட்டுவிட்டது ' என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் மத்திய மந்திரி ஏ. பி. ஜெயின் தெரிவித்துவிட்டு மேலும் சொன்னர் :

" 'உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடாது' என்ற தடை— ஸ்தல மார்க்கெட்டில் சர்க்கார் உணவுப் பொருள் வாங்காமல் நின்றது—அரிசி, நெல் சேமிப்புகளின்மீது ஷெட்யூல்டு பாங்கிகள் முன்பணம் தராமல் நிறுத்தியது—இவை எல்லாம் உணவுப்பொருள் விலை ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாகும்.

"மேலும், கோதுமை, அரிசி ஆகியவை மாநில சர்க்கார்களின் நியாயவிலைக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்திருப்பதும் சர்க்காரின் நடவடிக்கையாகும்."

---

## கதிரியக்க ஆராய்ச்சிமுடிவு

கோபன் ஹகன், ஆக. 16— மருத்துவம், தொழில் பரிசோதனை விஞ்ஞானத் துறைகளில் மக்களால் ஏற்படக்கூடும் கதிரியக்க அபாயங்களைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென பத்து நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஆராய்ச்சிக் குழு சோதனை தெரிவித்துள்ளது.

கதிரியக்கம் மனிதனில் ஏற்படுத்தும் விளைவுகளின் சரியான அளவு முக்கியத்துவம் ஆகியவற்றை முடிவு செய்ய இன்னும் நிபுணர்களால் முடியவில்லை என்பதை 21 விஞ்ஞானிகளடங்கிய இவ்வாராய்ச்சிக் குழு ஒப்புக்கொள்கின்றது.

எக்ஸ்ரே குழாய்களில் கதிரியக்கப் பொருட்கள், கல்வி, விஞ்ஞானம், தொழில் முதலியவைகளில் பயன்படுத்தும் அணு உலைகள், கைக் கடிகாரங்களிலும கருவிகளிலும் பிரகாசிக்கும் வர்ணம், பூமி, ஆகாயம், தண்ணீர் ஆகியவற்றுள்ள மற்றக் கதிரியக்கப் பொருட்கள் ஆகியவை மக்களால் ஏற்படக்கூடும் கதிரியக்க முறைகளில் குறிப்பிட்டுள்ளன.

இதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பரிசீலனை செய்ய இந்த முறைகளையும் மற்றக் கதிரியக்க முறைகளையும் சரிவர அளவிடுதல் கணக்கு வைத்துக்கொள்ளுதல் முதலிய தேவைக்கு இக் குழு நெருங்கிய கவனம் செலுத்தியது.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.